# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2021.11.08 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ புத்திக பதிரண
அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 24.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்)

## இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை*

"இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகம்" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான நிறுவகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிறுவகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக் கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னால் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகம் எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகால வரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித் தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப் படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த் துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) "இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டி ணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்

கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராகவும் வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவானதாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) கல்வியூட்டல் மூலம் கப்பற்துறைசார் தொழில் நிபுணத்துவத் துறைகளை மேம்படுத்தல் ;

(ஆ) கப்பல்துறைசார் வியாபாரத்தில் சார்ந்திருப்பவர்களுக்கும் இனிவரக்கூடியவர்களுக்கும் அறிவூட்டல் ;

(இ) கப்பல் வணிகத்துறையில் மிக அனுபவமுள்ள கற்றதோர் பணியாளர் தொகுதியினை ஈடுபடுத்துவதன் வேண்டி பிரதானமான கப்பற் கம்பனிகளின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகளை ஊக்குவித்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மையை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அதற்கு உறுப்பினர் சேர்க்கப்படுதலைக் கட்டுப்படுத்தலும் கப்பல் வணிகத் துறையில் தகைமைபெற விரும்புகின்ற ஆட்களின் உயர்தொழில்சார் கல்வியையும் பயிற்சியையும் பொறுப்பேற்றலும் ஒழுங்குபடுத்தலும், நிறுவகத்தின் உறுப்பாண்மைக்காகத் தகைமை பெறும் பரீட்சைகளுக்கான கற்கைநெறிகளை விதந்துரைத்தலும் அங்கீகரித்தலும், அத்தகைய கற்கைநெறிகளையும் பரீட்சைகளையும் நடாத்துதலும் அல்லது நடாத்துவதற்கான ஏற்பாடு செய்தலும், கப்பல் வணிகத்துறையிலான கல்வியை முன்னெடுத்து செல்வதற்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுடனும் இணைந்து செயலாற்றுதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைகளையும் தகுதியீனங்களையும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கான உயர்தொழில்சார் நடத்தைக்

கான தராதரங்களையும் விதந்துரைத்தலும், அவற்றுக்கு இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்தலும்;

(ஊ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மாநாடுகள், கருத்தரங்குகள், அரங்குகள், வேலைக்களங்கள், கூட்டங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்தலும் நடாத்துதலும் ;

(எ) அபிவிருத்தித் திட்டங்களை நோக்காகக்கொண்டு சந்தைப்படுத்துவதற்காக கப்பற் துறைசார் வணிகங்களை இலக்காக்கொள்ளல் ;

(ஏ) குறித்த துறையில் கற்கைகளைப் பொறுப்பேற்றலும், மேம்படுத்தலும், வசதிப்படுத்தலும் ;

(ஐ) இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் உள்ள ஒத்த கழகங்களுடன் புரிந்துணர்வையும், ஒத்துழைப்பையும், நற்புறவையும் மேம்படுத்ததுல் ;

(ஒ) பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் உறுப்பாண்மைகளை வழங்குதல் ;

(ஓ) கப்பல் மற்றும் பண்டங்களின் போக்குவரத்து தொடர்பில் அரசாங்கத்திற்கு உதவி மற்றும் பரிந்துரைகளைச் செய்தல் ;

(ஔ) மேற்படி குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான வாறானவையும் அதன் இடைநேர்விளைவானவையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்*

**4**. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் கட்டுப்பாடு, நிருவாகம் ஆகியன இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய, பதவிதாங்குநர்களையும், அவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்களுமான அத்தகைய வேறு ஆட்களையும்கொண்ட, முகாமைச்சபை ஒன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.)

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற நிறுவகத்தின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

**5**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும் :- கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்

(அ) நிதிகளைத் திரட்டுவதற்கும், காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளை பெறுவதற்கும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான எம்முறையிலும் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது கேள்வுக்கு எடுப்பதற்கும் அல்லது கொடுப்பதற்கும், வாடகைக்கு விடுவதற்கும், விற்பதற்கும் அல்லது வேறு வகையாகக் கையுதிர்ப்பதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொழிலுக்கு அவசியமான அல்லது வசதியான எவையேனும் கட்டிடங்களை அல்லது கட்டுவேலைகளை நிர்மாணிப்பதற்கும், பேணுவதற்கும், மாற்றுவதற்கும் ;

(இ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் மற்றும் ஏனைய கைமாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குவதற்கும், வரைவதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும், கழிப்பனவு செய்வதற்கும் புறக்குறிப்பிடுவதற்கும், பேச்சுவார்த்தை மூலம் பெறுவதற்கும், வாங்குதற்கும், விற்பதற்கும், வழங்குவ

தற்கும், வங்கிக்கணக்குகளைத் திறப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும், மூடிவிடுவதற்கும், பிணைப்பொறுப்புடனோ பிணைப்பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாக தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைச்சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் குறிப்பீடுசெய்வதற்கும்;

(உ) இக்குறிக்கோள்களைச் செயற்படுத்துவதற்காக எவரேனுமாளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கும்;

(ஊ) வெவ்வேறு வகுதியினவான உறுப்பாண்மைகளைப் பதிவுசெய்தல் தொடர்பில் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், தொழிலுக்கமர்த்துவதற்கும், பதவிவிலக்குவதற்கும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துவதற்கும், கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்கு செலுத்துவதற்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றில் எவற்றுக்கும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கமும், ஒவ்வொரு வகுப்பினருமான உறுப்பினர்களினாற் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், உறுப்பினர் விலகுதலும் அல்லது அவர்களை விலக்குவதும் அல்லது அவர்கள் பதவிநீங்குதலும், உறுப்பினர்கள் பற்றிய இடாப்பைப் பேணுதலும் ;

(ஆ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவி தாங்குநர்கள் தமது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் அத்துடன் சேவையாளர்களின் நியமனம், அவர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் நியதி நிபந்தனைகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் சபையினதும், அதன் ஏதேனும் உபகுழுவினதும் கூட்டங்களைக் கூட்டுவதிலும், நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும் அதற்கான கூட்ட நடப்பெண் உட்பட அத்துடன் அதில் அலுவல்களை நடாத்துதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தினதும் சபையினதும் உறுப்பினர்களுக்கான தகைமையும், தகைமையீனமும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதிகள், அதேபோன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியொன்றாற்போன்று அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கமைந்தோராதல் வேண்டும்.

(4) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் நிறுவகத்தின் விதிகள், அவை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண் டும்.

*கட்டணங் களையும் ஒப்பப் பணங்களையும் அறவிடுவதற் கான தத்துவம்*

**7**. கூட்டுத்தாபனம் பின்வருவனவற்றை அறவிடுவதற்கு சடடப்படி இயலுமானதாயிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தால் நடாத்தப்படும் ஏதேனும் பரீட்சைக்கு அல்லது கல்விநெறிக்கு அனுமதிப்பதற்கு கூட்டுத்தாபனம் நியாயமானதெனக் கருதக்கூடிய அத்தகைய கட்டணங்கள் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு வகுப்பினதும் உறுப் புரிமைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான கட்டணங்கள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடமிருந்து அறவிடு வது தோதானதென கூட்டுத்தாபனம் கருதக்கூடிய அத்தகைய ஒப்பப்பணங்களும் கட்டணங்களும்.

*கூட்டுத்தாப னத்தின் அலுவலர்களும் சேவை யாளர்களும்*

**8**. சபை, அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தைகய ஏனைய அலுவலர்களையும் சேவையாட்களையும் நியமிக்கலாம் என்பதுடன் அவர்களது பதவிப் பெயர்களையும் குறித்தொதுக்க லாம்.

*கூட்டுத்தாப னத்தின் கணக்குகளும் கணக்காய்வும்*

**9**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக் கப்பட்ட ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காள ரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்க ளுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத் தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத் தினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற் காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்ட வராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

நிறுவகத்தை கூட்டுத்தாப னத்துக்கு உறித்தாக்கல்

**10.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து -

(அ) நிறுவகத்தின் எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமும் ;

(ஆ) நிறுவகத்தின் எல்லா உரிமைகளும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும், அக்கறைகளும் மற்றும் நிறுவகத்தின் எல்லாப் பொறுப்புக்களும் ;

(இ) நிறுவகத்தின் எல்லாப் புத்தகங்களும், கணக்குகளும், ஆவணங்களும்,

கூட்டுத்தாபனத்துக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், (1) ஆம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றியும் -

(அ) நிறுவகத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் கட்டணங்களும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டம் தொடங்குவதற்கும் நேர்முந்திய நாளன்று நிறுவகத்தின் எல்லாப் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களாகவும் சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகச் செய்து கொள்ளப்பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் கூட்டுத்தாபனத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும், உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(உ) நிறுவகத்தின் அல்லது நிறுவகத்திற்கெதிராக தொடுக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருக்கின்றவையுமான

எல்லா வழக்குகளும், சட்டவழக்கு நடவடிக்கைகளும் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட சட்ட வழக்கு நடவடிக்கைகளாகத் தொடர்ந்து நடாத்தப்பட்டு வலுவுக்கிடப்படுதல் வேண்டும்.

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது செயலாளரினது அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவாறாக சபை உறுப்பினர் ஒருவரினதும் சபையின் இன்னுமோர் உறுப்பினரனது முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன் ; அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை*

**12.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரினாற் செலுத்தப்படற்பாலதான வருடாந்த ஒப்பப்பணத் தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்*

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவகத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்*

பெயர் மகுடத்தைப் பயன்படுத்துவதற்கான தகைமை

**14.** (1) ஒவ்வோர் உறுப்பினரும் விடயத்திற்கேற்ப "பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவகத்தின் உறுப்பினர்" மற்றும் "பட்டயக் கப்பற்தரகர்கள் நிறுவகத்தின் கூட்டுறுப்பினர்" என்னும் பெயர் மகுடத்தைப் பெறவும், பயன்படுத்தவும் அவரது பெயருக்குப் பின்னால், விடயத்திற்கேற்ப "எம்.ஐ.சி.எஸ்." அல்லது "எப்.ஐ.சி.எஸ்." என்னும் முதலெழுத்துக்களைப் பயன்படுத்தவும் உரித்துடையவராதல் வேண்டும் என்பதுடன் "பட்டயக் கப்பற்தரகர்" தகுதிக்காக உரித்துடையோராதலும் வேண்டும்.

(2) மேற்சொல்லப்பட்டவாறு தவிர, ஆள் எவரும், எத்தகையதுமான எந்நோக்கத்துக்காகவேனும் அத்தகைய பெயர் மகுடத்தை அல்லது அத்தகைய முதலெழுத்துக்களைப் பெறுதலோ, பயன்படுத்தலோ ஆகாது.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்களுக்கான நட்டோத்தரவாதம்

**16.** ஆள் எவரும் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் சுமத்தப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடாத்துகின்ற நோக்கத்திற்காக நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட வேண்டுமெனகருதப்படுகின்ற ஏதேனும் செயலுக்காக ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வேறு ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் பொறுப்பாளியாக மாட்டார்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**17.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.